# எனது அன்றாட கடமைகள்

வளர்நிலை - 4

நான் காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்த பின் கடவுளை வணங்குவேன். கடவுளை வணங்குதல் நமது கடமை என்பதை நாம் உணர்ந்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும். எனது காலை உணவை உண்டபின், சுத்தமான உடையணிந்து பாடசாலைக்குச் செல்வேன்.

பாடசாலையில் என் நண்பர்களுடன் அன்பாகப் பழகுவேன். ஆசிரியரின் சொற்படி எனது பாடங்களை கவனமாகப் படிப்பேன். பள்ளிக்கூடத்தில் அதிபர் ஆசிரியர்களை மதித்து மரியாதை கொடுத்து பண்புள்ள மாணவனாக நடப்பேன்.

விளையாட்டுத் திடலில் என் போன்ற மாணவர்களுடன் நன்றாக விளையாடுவேன். வெற்றி தோல்விகளை மகிழ்ச்சியாகப் பகிரக் கற்றுக் கொள்வேன்.

பாடசாலை முடிந்ததும் எனது அப்பாவுடன் வீட்டுக்குச் செல்வேன். வீடு சென்றதும் அம்மா, அப்பா, பாட்டா, பாட்டி, அண்ணா, அக்காவுடன் எனது பாடசாலையில் நான் படித்தவற்றை உரையாடி மகிழ்வேன். ஒவ்வொரு நாளும் நான் எனது தாய்மொழியாகிய தமிழை மிகவும் கவனமாகப் படிப்பேன். தமிழை படிமுறைத் தமிழ்ப் பள்ளியில் பயின்று வருகிறேன்.

நன்றி, வணக்கம்!